# <u>கம்பம் நகராட்சி</u>

**2020–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (30.11.2020) ஆம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## <u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 11/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 11/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி **110**–இன் கீழ் **19.03.2020** அன்று வெளியிட்ட அறிக்கையில், நகராட்சி பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைத்திட அறிவிக்கப்பட்டுள்ளதன்படி, அரசாணை எண். **(4ப)** எண். **6**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் **(மா.ந.2)** துறை, நாள். **03.09.2020**ன் வழிகாட்டுதல்களில் தெரிவித்துள்ளவாறு , நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் திறவிடங்களில் **120** சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் யோகா மையக் கட்டிடங்கள் கட்டவும், **100** சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடங்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கவும், பொதுநிறுவனங்கள், தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொதுநிதியினை பயன்படுத்தி ஒரே மாதிரி ஏற்படுத்திடவும், தொடர்பராமரிப்பு செய்யும் வகையில் செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, கம்பம் நகராட்சிக்கு சொந்தமான பார்க் சாலையில் உள்ள காந்திஜி பூங்கா வார்டு D, பிளாக்–17, T.S.No. **3**–ல் கட்டுப்பட்டுள்ள பூங்கா இடத்தில் யோகா மையம் ரூ. **20.00**இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் ரூ. **9.50** இலட்சம் மதிப்பீட்டிலும் அமைத்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை பொதுநிதி 2020–2021ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந.க.எண்: **2636/2020/இ1**) |
| **4.** | கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம் – குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 410.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP)– அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்காணும் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டிற்கு தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் அனுமதி பெறும் பொருட்டு (Concern to establish) ரூ. 43,600/–ஐ தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், தேனிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர்/ ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 2121/2019/இ1)** |
| **5.** | இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு ஹைட்ராலிக் ஈப்பு வாகனம் TN 60 T **7497**க்கு **06.02.2021**ம் தேதியுடன் காப்பீட்டு காலம் முடிவடைவதால், அதற்கான தொகை ரூ. **19,191/–**ஐ ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த நகர்மன்ற தீர்மானம் எண். **1959**, நாள். **31.01.2020**–ல் அனுமதிக்கப்பட்டது. இதனிடையே தகுதி சான்றுக்கான பணிகள் செய்ய **01.04.2020**ம் நாள் உரிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் 'கோவிட்19' காரணமாக கடந்த 7 மாதங்களாக ஊரடங்கு உத்திரவு அமலில் இருந்ததால், காப்பீட்டு கட்டணம் செலுத்துதல் மற்றும் தகுதி சான்றுக்கான பணிகள் செய்வதில் தாமதம் ஆகிவிட்டது. தற்போது இயல்பு நிலை திரும்பியதால் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு செலுத்தி தகுதி சான்று பெற உரிய நடவடிக்கை மேற்கொண்டதில், தற்போது காப்பீட்டு கட்டணமாக ரூ.**19,870/–** செலுத்த ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஏனவே, மேற்படி தொகை செலுத்த அனுமதியும், கூடுதல் செலவினத் தொகை ரூ. **679/–**க்கும் (ரூபாய் ஆறுநூற்று எழுபத்தி ஒன்பது மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிய தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.கஎண். 0323/2020/இ2) |

| | |
|---|---|
| **6.** | இந்நகராட்சிக்கு லோயர்கேம்ப் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் பம்பிங் செய்து குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிப்பு இயக்கம் இருந்த நிலையில், நகராட்சிக்கென தனி குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு மேற்படி திட்டம் 17.4.2020 முதல் இயக்கம் மற்றும் பேணுதல் ஆகிய முழு பொறுப்பும் நகராட்சி வசம் ஒப்புடைப்பு செய்யப்பட்டது. இக்குடிநீர் திட்டத்தில் சுத்திகரிக்கப்பட்ட (Clear Water) குடிநீர்,தன்னோட்ட குழாய் வழியே வெளியேறும் இடத்திலிருந்து சுமார் **190** மீட்டர் நீளம் வரை தொட்டி மட்டத்திலிருந்து குழாய் தன்னோட்ட வடிவில் இல்லாமல், மேல்நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் அளவினை அதிகரிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இக்குறைபாட்டை சரி செய்ய தன்னோட்ட குழாயினை தற்போதுள்ள நிலையிலிருந்து **190** மீட்டர் நீளம் வரை கீழே இறக்கி ஆழப்படுத்தி பதிக்கவும், மேலும் சுத்திகரிப்பு தொட்டியின் (Filter bed tank) மேற்கு கடைசி தொட்டியின் வடபுறம் உள்ள சுவர் பழுதான நிலையில் உள்ளதால் அத்தொட்டியில் குடிநீர் சுத்திகரிப்பு பணி செய்ய இயலாமல் பயனற்ற நிலையில் உள்ளதை பராமரித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பம்பு ரூம் மேல் தளம் சரிவர இல்லாததால் மழை நேரத்தில் மழை நீர் பம்பு ரூம் உள்பகுதியில் இறங்கி அங்குள்ள மின் இணைப்பு பேனல் போர்டு பழுதடையவும் ஆபத்து ஏற்டவும் வாய்ப்புள்ளது. எனவே இவற்றை பராமரிப்பு பணி செய்ய தயார் செய்த மதிப்பீடு ரூ.**850000/–**க்கு (ரூபாய் எட்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :– **1)** இப்பணி மேற்கொள்வதால் கம்பம் நகருக்கு மேலும் கூடுதல் குடிநீர் கிடைக்கும் என்பதால், பொதுமக்களின் குடிநீர் அவசியம் கருதி மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) மேற்படி பணியின் செலவினத்தை **2020–2021** குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். |
| **7.** | இந்நகராட்சிக்கு லோயர்கேம்ப் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் பம்பிங் செய்து குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிப்பு இயக்கம் இருந்த நிலையில், நகராட்சிக்கென தனி குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு மேற்படி திட்டம் 17.4.2020 முதல் இயக்கம் மற்றும் பேணுதல் ஆகிய முழு பொறுப்பும் நகராட்சி வசம் ஒப்புடைப்பு செய்யப்பட்டது. இக்குடிநீர் திட்டத்தில் இரண்டு 75 குதிரை திறன் உடைய இரண்டு மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டதில், ஒரே நேரத்தில் ஒரு மோட்டார் மட்டுமே (110 HP திறனில்) இயங்கும் நிலையில் வடிவமைப்பு செய்ததால் **6200** LPM நீர் பம்பிங் செய்யப்படுகிறது. இதனால் படுக்கை வடிகட்டி தொட்டிகளில் சேகரம் ஆகும் நீரும், சுத்திகரிக்கப்பட்ட தொட்டியிலிருந்து தன்னோட்ட குழாய் வழியே வெளியேறும் குடிநீரின் அளவும் சமமாக உள்ளதால், எதிர்பாராத விதமாக மின்தடை ஏற்பட்டால் தன்னோட்ட குழாயில் காற்றடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகத்தில் தாமதம் ஏற்படுகிறது. எனவே இதனை சரி செய்ய புதியதாக **40** HP / **3000** LPM திறன் கொண்ட மோட்டார் ஒன்று புதியதாக பொருத்தவும், மேலும் அங்குள்ள குடிநீர் திட்ட பம்ப்ரூம் மற்றும் மின் இணைப்பு அனைத்தும் பழையன அப்படியே ஒப்படைப்பு செய்ததால் அதில் வயரிங் இணைப்புகள் சரிவர இல்லாததால், அதனை பாதுகாப்பு கருதி உரிய முறையாக சீரமைக்க கோரி கூடலூர் மின் வாரிய உதவி மின் பொறியாளர் அவர்கள் **2.9.2020–**ம் தேதிய **502/2020** எண்ணிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி குடிநீர் திட்டத்தில் மின் இணைப்பும் மோட்டாரும் உயிர்நாடியாக இருப்பதால், இதற்கான மேம்பாட்டு பணிகள் செய்து தற்போது பம்பிங் செய்யப்படும் குடிநீர் **6200** LPM லிருந்து **9200** LPM ஆக அதிகரித்து பொதுமக்களுக்கு குறைவின்றி குடிநீர் விநியோகம் செய்திட, அதற்கான பணிகள் மேற்கொள்ள தயார் செய்த மதிப்பீடு **820000/–**க்கு (ரூபாய் எட்டு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :– **1)** பொதுமக்களின் குடிநீர் அவசியம் கருதி மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| | **2)** மேற்படி செலவினத்தை **2020–2021** குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். |
| **8.** | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடமற்ற (Open Defecation Free ) நகரமாக அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து அடுத்த கட்ட நிலையாக (ODF+ ) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தல் நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Decleration ) கம்பம் நகராட்சிக்கு (ODF+ ) சான்று பெறுவதற்கும் மற்றும் கம்பம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City ) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating ) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declaration ) தொடர்பான பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பெறுவதற்கும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :– **1)** மன்றம் அனுமதிக்கலாம் |
| | **2)** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நாளிதழில் விளம்பரம் செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1201/2015/எச்1) |

| | | |
|---|---|---|
| 9. | கம்பம் நகராட்சி பகுதியில் தினந்தோறும் 18 TPD குப்பை கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் 6 MT மக்கும் கழிவுகள் ஆங்கூர்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள நுண்உரம் செயலாக்க மையத்திலும் (MCC) நந்தகோபால்சாமி நகர் நுண் உரம் செயலாக்க மையத்திலும்(MCC) மற்றும் கம்பம் to கூடலூர் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் Windrows முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விற்பனை செய்யக்கூடிய Dry Waste தரம் பிரிக்கப்பட்டு துப்புரவு பணியாளர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு அவர்களுக்கு தொகை பிரித்து வழங்கப்படுகிறது. விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் Ultra Tech Cement Factory–க்கு அனுப்பப்படுகிறது. இவற்றை தவிர மக்காத கழிவுகள் (தலையணைகள், மெத்தை கழிவுகள், உடைந்த பாட்டில்கள், கண்ணாடிகள், மரக்கிளைகள், புல்பூண்டுகள் மற்றும் இதர கழிவுகள்) நகராட்சி வாகனம் மூலம் Biomining செய்யப்படாத இடத்தில் நகராட்சி உரக்கிடங்கில் மேற்புறத்தில் ஒரு சிறிய இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்விடத்தை தவிர நகராட்சிக்கு குப்பை கழிவுகள் கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை. குறுகிய இடத்தில் தினமும் குப்பை கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் மலைபோல் தேங்கி மேடாக உள்ளது. இவற்றில் நகராட்சி வாகனங்கள் உள்ளே சென்று குப்பை கழிவுகளை மீண்டும் கொண்ட முடியாத சூழ்நிலை உள்ளது.<br>எனவே பொதுமக்கள் பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு மேடாக உள்ள குப்பை கழிவுகளை Chain Bulldozer மூலம் ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.300000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | அலுவலகக்குறிப்பு :– | 1) மன்றம் அனுமதிக்கலாம் |
| | | 2)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.களண். 2912/2020/எச்1) |
| 10. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4504 டம்பர் பிளேசர் லாரிக்கு 29.11.2020 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,50,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக்குறிப்பு :– | 1)மன்றம் அனுமதிக்கலாம் |
| | | 2)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.களண். 2907/2020/எச்1) |
| 11. | இந்நகராட்சிக்குட்பட்ட எல்.எப்.ரோட்டின் மேற்கு பக்கம் கழிவுநீர் வடிகால் அமைப்பதை ஆட்சேபித்து திரு வேல்பாண்டியன் மற்றும் மூன்று நபர்களால் தேனி மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.121/2020 –ல் நகராட்சி சார்பாக ஆஜராகி தொடர்ந்து வழக்கினை நடத்தி வரும் திரு ஏ.பாலமுருகன் B.Com.,L.L.B.,அரசு வழக்கறிஞர்,தேனி அவர்கள் வழக்கு கட்டணம் ரூ.10,000/–ஐ வழங்க கோரியுள்ளதன்படி, மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக்குறிப்பு :– | மன்றம் அனுமதிக்கலாம். |
| 12. | இந்நகராட்சிக்கு லோயர்கேம்ப் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் பம்பிங் செய்து குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிப்பு இயக்கம் இருந்த நிலையில், நகராட்சிக்கென தனி குடிநீர் திட்டம் ரூபாய் 18.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு மேற்படி திட்டம் 17.04.2020 முதல் இயக்கம் மற்றும் பேணுதல் ஆகிய முழு பொறுப்பும் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தினை பராமரிக்க தேவையான பணியாளர்கள் இல்லாததால் தலைமை பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தபுள்ளி கோரும் வரை தற்காலிகமாக 7/2020 முதல் 10/2020 வரை நான்கு மாதங்களுக்கு பராமரிப்பு செய்ய உரிய மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண் 2049 நாள் 30.06.2020 ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட குறைவான விகிதம் குறிப்பிட்டுள்ள திரு எல்.ராஜேந்திரன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி இயக்குதல் மற்றும் பேணுதல் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி ஒப்பந்த காலம் 31.10.2020 –ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் இத்திட்டம் தலைமை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி 22.10.2020–ம் தேதி அனுமதி கிடைக்கப்பெற்றதால் வருடாந்திர பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரி மன்ற ஒப்புதல் பெற்று இறுதி செய்ய 11/2020 ஒரு மாத காலம் ஆகும் என்பதால், மேற்படி குடிநீர் திட்டத்தை தொடர்ந்து இயக்குதல் பணியினை, ஏற்கனவே செய்து வரும் ஒப்பந்ததாரர் திரு எல்.ராஜேந்திரன் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விலைவிகித அடிப்படையில் மேலும் ஒரு மாதம் 1.11.2020 முதல் 30.11.2020 வரை கூடுதலாக இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்ய கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க அனுமதியும், அதற்கான மதிப்பீடு தொகை ரூ.2,25,000/–க்கும் (ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு :– | **1)** பொது மக்களின் குடிநீர் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். |
| | | **2)** மேற்படி செலவினத்தை **2020–2021** குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். |

**13.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ்கண்ட TATA ACE வாகனங்கள் குப்பை கிடங்கில் செல்லும்போது பாட்டில் , இரும்பு, மற்றும் பீங்கான் போன்றவைகளால் டயர்கள் குத்தப்பட்டு அடிக்கடி பழுதாகி தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, கீழ்கண்ட வாகனங்களுக்கு பொதுசுகாதார அவசியம் கருதி புதியதாக **12** எண்ணம் டயர்கள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன எண் | டயர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | TATA ACE – TN60 AW 8347 | 4 |
| 2. | TATA ACE – TN60 AW 8375 | 4 |
| 3. | TATA ACE – TN60 AW 8353 | 4 |
| | மொத்தம் | 12 |

அதற்கான உத்தேச செலவினம் ரூ. **48,000/–**க்கும், செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம்.

**14.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 38038/2013/யுபிஏ2, நாள். 03.01.2017 ன்படி, கம்பம் நகராட்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் மருத்துவமனையில் தங்குவதற்கான கட்டிடம் ரூ. **90.00** இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண். **1082**, நாள். **30.08.2018** ல் மேற்படி கட்டிடத்திற்கு மேற்பார்வை மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட விவேகானந்தா மாணவர் இல்லம், கம்பம் தொண்டு நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளதன்படி முதற்கட்டமாக **14.11.2018** முதல் **13.11.2019** வரை ஓராண்டுக்கு பராமரிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டு, ஓராண்டு முடிவுற்ற நிலையில் மேலும் **13.11.2019** வரையிலும் அதன் பின் **13.11.2020** வரையிலும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில் விவேகானந்தா தொண்டு நிறுவனத்தால் மேலும், தொடர்ந்து பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதி கோரியதன் பேரில் காப்பக மேலாண்மை குழு கூட்ட நடவடிக்கைகளின்படி மேலும் ஓராண்டிற்கு **14.11.2020** முதல் **13.11.2021** வரை நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.. மன்றம் பதிவு செய்யலாம்.

**ஒப்பம்/– திரு. மெ. சரவணகுமார்**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 30.11. 2020**
**இடம். கம்பம்**